**அனுப்புநர்**

முனைவர்.சி.உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,
இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி.

**ந.க.எண். 127311/எச்.1/2019** **நாள் :18.03.2020**

**ஐயா / அம்மையீர்,**

**பொருள்:** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மார்ச் 2020 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு – வரலாறு பாடத் தேர்வு – புதிய பாடத்திட்டம் – தேர்வர்களுக்கு முதன்மை விடைத்தாள் வழங்குதல் குறித்த அறிவுரை – தொடர்பாக.

**பார்வை:** இவ்வலுவலக கடித ந.க.எண். 084862/எப்1/2019, நாள்.21.02.2020.

------

பார்வையில் காணும் கடிதத்தில் மார்ச் 2020 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வில் புதிய பாடத்திட்டத்தில் வரலாறு பாட தேர்வெழுதும் மாணாக்கருக்கு வழங்கும் முதன்மை விடைத்தாளுடன் ஒரு இந்திய வரைபடத்தினையும், ஒரு உலக வரைபடத்தினையும் வைத்து தைக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களும் 20.03.2020 அன்று நடைபெறவுள்ள மேல்நிலை இரண்டாம் ஆண்டு வரலாறு (History) பாடத் தேர்வினை புதிய பாடத்திட்டத்தில் (New Syllabus) எழுதும் தேர்வர்களுக்கு வழங்கப்படும் முதன்மை விடைத்தாளுடன் (Main Sheet) ஓர் இந்திய வரைபடம் மற்றும் ஓர் உலக வரைபடம் வைத்து தைக்கப்பட்டுள்ளனவா என்பதனையும் பழையப் பாடத்திட்டத்தில் வரலாறு பாடத் தேர்வெழுதும் தேர்வர்களது முதன்மை விடைத்தாளுடன் ஓர் இந்திய வரைபடம் வைத்து தைக்கப்பட்டுள்ளதா என்பதையும் மீளவும் உறுதிச் செய்துக் கொள்ளுமாறு அனைத்து மேல்நிலைப் பள்ளி தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளருக்கும் அறிவுறுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்/–
**இயக்குநர்**

**<u>நகல்</u>**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
2. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.